தனிப்பிரதி ரூ.5/
ஆண்டு சந்தா ரூ.50/

THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்



கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக


கொலோசெயர் 3:16

ஆசிரியர்
B. அர்ஜுனன்

மரம் 10 செப்டம்பர் 2010 கனி 10

# எரிகோ

# Jericho



1. இது யோர்தான் பள்ளத்தாக்கில் சவக்கடலின் வடமேற்கே 16 கி.மீ அளவில் அமைந்துள்ள ஒரு முக்கிய நகரமாகும்
2. இது 'பனை நகரம்' எனவும் அழைக்கப்படுகிறது (உபா. 34:3; நியாயா. 1:16; 3:13; 2 நாளா. 28:15)
3. எரிகோ ஒரு செழுமையான சமவெளியில் அமைந்துள்ளதால் 'எரிகோவின் சமவெளி' யாக ஓப்பிடப்படுகிறது (யோசு. 4:13; 2 இராஜா. 25:5)
4. பழமையான எழுத்தாளர்கள் இதன் பனை மற்றும் பாலைவனப்பகுதி நீரோடைகளிலுள்ள பால்சம் மரங்களை புகழ்ந்துள்ளனர்
5. இதன் சுற்றுப்புறம் இனிமையானது




## கிறிஸ்துவின் வசனம்

*வழங்கும்*

**தொலைக்காட்சி நிகழ்ச்சி**



தமிழன் TV யில் திங்கள் காலை 6.00-6.15
இமயம் TV யில் புதன் காலை 6.30-6.45

*ரேடியோ நிகழ்ச்சி*

இலங்கை ஆசிய சேவை SW 25 மற்றும் 41 மீட்டரில்
ஒவ்வொரு சனி மாலை 5.30 முதல் 5.45 மணி வரை
கேட்டு சத்தியத்தை அறிந்துகொள்ளுங்கள்





Website: www.thewordofchristindia.com


**"Go ye into all the world, and preach the gospel to every creature"** Mark 16:15

**"The Churches Of Christ Salute you"** Romans 16:16


**Published by**
**WORLD LITERATURE PUBLICATIONS**
**Post Box No.5, Batlagundu - 624 202.**
**SOUTH INDIA**

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

## THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 10 செப்டம்பர் - 2010 கனி - 10


ஆசிரியருரை

# கண்விழித்திரு
# Open Your Eyes



கண்விழித்திருப்பதால் வரும் ஆசீர்வாதம் என்னவென்பதையும், கண்விழித்திருந்து ஜெபித்தவர்களையும், துன்மார்க்கனின் கண்விழிப்பு எப்படியிருக்கிறது என்பதையும் இச்செய்திவேளையில் நாம் தியானிக்கவுள்ளோம். **முதலாவது கண்விழித்திருப்பதால் வரும் ஆசீர்வாதம் என்னவென்பதை தியானிப்போம்.** ஒரு காரியத்தை செய்யும் முன் அதனால் வரும் நன்மையை முதலாவது அறிய முற்படுவோம். சாலொமோன் குறிப்பிடுகிறார் "தூக்கத்தை விரும்பாதே, விரும்பினால் தரித்திரனாவாய்; கண்விழித்திரு, அப்பொழுது ஆகாரத்தினால் திருப்தியாவாய்" (நீதி.20:13). கண்விழித்திருந்து வேலைசெய்கிற மனிதன் ஆசீர்வதிக்கப்படுகிறான். ஒரு வேலையைச் செம்மையாய் செய்யவேண்டுமானால் அவ்வேலையை ஜாக்கிரதையாய்ச் செய்யவேண்டும் அதுவும் கண்விழித்திருந்து செயல்படவேண்டும். அப்பொழுது தான் அதை சிறப்புடன் செய்து முடிக்க முடியும். ஒருவேளை தூக்கத்தை விரும்பி தன் வேலையில் ஒருவன் கண்விழித்திராமல், தூங்கிவிடுவானேயானால் அவன் அந்த வேலையில் நஷ்டம் அடைவான் அல்லது முழுவேலையையும் இழக்கவேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்படுவான். ஆகையால், கண்விழித்திரு அப்பொழுது ஆகாரத்தினால் திருப்தியாவாய் எனபரிசுத்தவேதம் போதிக்கிறது. காட்டு புஸ்பங்களையும், ஆகாயத்துப்பறவைகளையும் கவனித்துப்பாருங்கள் என்று நம் ஆண்டவர் சொல்வதை சற்று கவனமாக நோக்குங்கள். அதனிடத்தினின்று நாம் அநேக பாடங்களை கற்றுக்கொள்ளமுடியும். "அவர் மிருகஜீவன்களுக்கும் கூப்பிடுகிற காக்கைக் குஞ்சுகளுக்கும் ஆகாரங்கொடுக்கிறார்" (சங்.147:9). உலகத்தில் எண்ணிமுடியாத மிருகஜீவன்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறதை நாம் அறிவோம். இவைகளை கர்த்தர் ஒவ்வொரு நாளும் போஷிக்கிறார். கூப்பிடுகிற

காக்கைக் குஞ்சுகளுக்கும் ஆகாரங்கொடுக்கிறார். இச்செய்தியை வாசிக்கிற நீங்கள் கண்விழித்திருந்து அவரை நோக்கி ஜெபிக்கும்போது, உங்களுடைய வேண்டுதலைகேட்டு உங்களுக்கு ஆகாரத்தை வருஷிக்கப்பண்ணாமல் இருப்பாரா? காக்கைக் குஞ்சுகளுக்கு ஆகாரங்கொடுக்க அறிந்த கர்த்தர் தமது சாயலில் உண்டாக்கப்பட்ட உங்களையும் போஷிக்க அறிந்திருக்கிறார். அவைகளைப்போல நீங்களும் அவரை நோக்கி பாருங்கள், அப்பொழுது ஆகாரத்தினால் திருப்தியாவீர்கள். ''எஜமான் வரும்போது விழித்திருக்கிறவர்களாகக் காணப்படுகிற ஊழியக்காரரே பாக்கியவான்கள்'' என்று லூக்.12:37-ல் வாசிக்கிறபடி விழித்திருக்கிற ஊழியக்காரராயிருங்கள். சில ஊழியக்காரர்கள் எஜமான் வர காலதாமதமாகும் என்று மெத்தனமாக இருந்து தூங்கிவிடுவார்கள். அப்படியில்லாதபடி, எப்பொழுதுவருவார் என்று காத்திருக்கிற மனுஷனுக்கு ஒப்பாகவும், ஆயத்தமுள்ள ஊழியக்காரனாயும், விழித்திருக்கிற வேலைக்காரனாயும் செயல்படுங்கள். அப்பொழுது பாக்கியவானாயிருப்பீர்கள். கண்விழித்திருக்கிறவர்கள் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்படுகிறார்கள். நீங்களும் ஆசீர்வதிக்கப்பட கண்விழித்திருந்து ஜெபியுங்கள்.

**இரண்டாவது தன்னுடைய வாழ்நாளெல்லாம் கர்த்தரை நோக்கிக்கொண்டிருந்த ராஜாவாகிய தாவீதை குறித்து நாம் வாசிக்கும்போது,** அவர் ''என் கண்கள் எப்போதும் கர்த்தரை நோக்கிக்கொண்டிருக்கிறது; அவரே என் கால்களை வலைக்கு நீங்கலாக்கிவிடுவார்'' என்று சொல்வதை சங்.25:15-ல் வாசிக்கிறோம். மனுஷருடைய கண்கள் நாட்டை ஆளும் ராஜாவை நோக்கி இருக்கும். ஆனால் இங்கே இஸ்ரவேலை ஆண்டுவந்த ராஜாவாகிய தாவீதின் கண்களோ கர்த்தரை நோக்கி இருந்ததாக வாசிக்கிறோம். தாவீது எப்போதும் என்ற ஒரு வார்த்தையை சொல்லுகிறார், அப்படியானால் அவர் எப்போதும் கர்த்தரையே நோக்கியவராக இருந்திருக்கிறார். சிலர் காரியம் கைகூடிவர மனுஷனை நோக்கிப் போகிறார்கள். ஆனால் தாவீதோ, எல்லா காரியத்துக்கும் தேவனையே நோக்கிப்பார்த்தார். ஆகையால் இக்கட்டுவேளையிலும் கர்த்தர் தாவீதை காப்பாற்றினார். சவுலின் கைக்கு தப்புவித்தார் என்றெல்லாம் காண்கிறோம். மனுஷன் வலையில் சிக்கவைக்கப்பார்ப்பான் ஆனால் கர்த்தரோ, அவரைநோக்கி இருக்கிறவர்களை வலைக்கு நீக்கி விடுவிக்கிறார். மேலும், உலகத்தில் இருக்கிற அனைத்து ஜீவன்களும் கர்த்தரை நோக்கி இருப்பதாக தாவீது குறிப்பிடுகிறார்; ''எல்லா ஜீவன்களின் கண்களும் உம்மை நோக்கிக்கொண்டிருக்கிறது; ஏற்ற வேளையில் நீர் அவைகளுக்கு ஆகாரங்கொடுக்கிறீர்'' என்கிறார் (சங்.145:15). நாமும் கர்த்தரை நோக்கி இருக்கும்போது நமக்கு ஒத்தாசை கர்த்தரிடத்திலிருந்து வரும். அவரே காரியத்தை செய்ய வல்லவர். அவரை நோக்கியிருப்பவர்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போவதில்லை. தாவீதை பெலப்படுத்திய கர்த்தர் உங்களையும் பெலப்படுத்த வல்லவராயிருக்கிறார். நீங்கள் அவரைநோக்கி

ஜெபியுங்கள். அவரையே நோக்கிக்கொண்டிருங்கள். மேலும் சங்கீதக்காரன் இப்படியாக எழுதுகிறார்; "உமது வசனத்தைத் தியானிக்கும்படி, குறித்த ஜாமங்களுக்கு முன்னே என் கண்கள் விழித்துக்கொள்ளும்" என்கிறார் (சங்.119:148). உங்களுக்கு இந்தவிதமான பழக்கம் உண்டா? கண்விழித்து குறித்த ஜாமங்களுக்கு முன்னே எழுந்து ஆண்டவருடைய வசனத்தை தியானியுங்கள். வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள் அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே. என்னைக்குறித்து சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே என்று கர்த்தர் சொல்லியிருக்கிறார். ஆகையால் வேதத்தை ஆராய்ந்து பார்க்கும்படியாக குறித்த ஜாமத்துக்கு முன்பாக எழுந்திருங்கள். கண்விழித்திருந்து ஜெபியுங்கள் அப்பொழுது கர்த்தர் உங்கள் காரியங்களை வாய்க்கப்பண்ணுவார்.

ஆண்டவர் இயேசு தம்முடைய சீஷர்களை அழைத்துக்கொண்டு ஜெபிக்கும்படியாக சென்றபொழுது அங்கே அவர்கள் நித்திரை செய்ததை நாம் மத்.26:38-46 வசனங்களில் வாசிக்கிறோம். அவரோ, மிக உருக்கமாக பிதாவைநோக்கி ஜெபித்தார். சீஷர்களோ நித்திரை மயக்கமாயிருந்தார்கள் என காண்கிறோம். அவர்களாலே ஒரு மணிநேரங்கூட கர்த்தரோடு விழித்திருந்து ஜெபிக்க முடியவில்லை. இன்றும் அநேகர் இப்படிதான் இருக்கிறார்கள். ஜெபக்கூட்டங்கள் நடத்துகிறார்கள் ஆனால் அங்கே ஜெபிப்பவர்கள் சிலராகத்தான் இருப்பார்கள். மாம்சம் பெலவீனமுள்ளதாயிருக்கிறது. ஆனால் ஆவியோ உற்சாகமாக இருக்கிறது. இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாக செயல்படுகிறது. முதலாவது முறை ஆண்டவர் ஜெபித்து விட்டு சீஷர்களைப் பார்த்தபோது; அவர்கள் நித்திரைபண்ணுகிறதைக் கண்டு, பேதுருவை நோக்கி: நீங்கள் ஒரு மணி நேரமாவது என்னோடேகூட விழித்திருக்கக்கூடாதா? என்று கேட்டு நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள்; ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது என்றார். இதற்கு பின்பாவது அவர்கள் நித்திரைபண்ணாது ஜெபித்திருக்கவேண்டுமல்லவா? ஆனால் அவர்களால் அதுகூடாமற்போனது. இரண்டாவது முறையும் அவர் அவர்களை வந்துபார்க்கையில் அவர்களுடைய கண்கள் மிகுந்த நித்திரைமயக்கம் அடைந்திருந்தது. ஆகையால் அவர்களை விட்டுப்போய் மூன்றாம் முறையும் பிதாவைநோக்கி ஜெபித்தார். பின்பு அவர் தம்முடைய சீஷர்களிடத்தில் வந்து; இனி நித்திரைபண்ணி இளைப்பாறுங்கள் என்று சொன்னார். எதற்காக சீஷர்களை அழைத்துக்கொண்டு சென்றாரோ அந்த நோக்கத்தை அறிந்த பேதுருவும் மற்ற சீஷர்களும் ஆண்டவரோடு அதை நிறைவேற்றாமற்போனார்கள். காரணமென்ன வென்றால் மாம்ச பலவீனத்தினிமித்தம் அவர்கள் நித்திரை மயக்கமாயிருந்தார்கள். இயேசுவோடு இருந்த சீஷர்களே இப்படியிருந்திருக்கிறார்கள் என்றால் இன்று சரிவர கர்த்தரை பற்றிக்கொண்டிராதவர்கள் எப்படியிருப்பார்கள்? அவர்கள்

கணநித்திரையின் ஆவியை உடையவர்களாக இருப்பார்கள் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. 24 மணிநேரத்தை ஒவ்வொரு நாளும் கழித்துக்கொண்டு வருகிறோம். நாம் ஒரு மணிநேரமாவது விழித்திருந்து ஜெபிக்கக் கற்றுக்கொள்வோம். 23 மணிநேரத்தை நமக்காக செலவு செய்வோம். இருக்கக்கூடிய நாட்களிலாவது இந்த தீர்மானத்தோடு செயல்படுங்கள். அதை இன்றே துவக்கும்படியாக உங்களை வேண்டி கேட்டுக்கொள்கிறோம்.

**மூன்றாவதாக துன்மார்க்கருடைய கண்விழிப்பு எப்படிப்பட்டதாக இருக்கிறது என்று தியானிப்போம்.** "திக்கற்றவர்களைப் பிடிக்க அவன் கண்கள் நோக்கிக்கொண்டிருக்கிறது" என சங்.10:8-ல் படிக்கிறோம். ஆம், அப்படிப்பட்டவர்களுக்கு உதவி செய்வதை துன்மார்க்கன் தவிர்த்துவிட்டு, அவர்களை பிடிக்க அவன் வகைதேடுகிறான். திக்கற்றவர்களுடைய நிலங்களை அபகரிக்கிறான். மானை வேட்டையாடும் சிங்கத்தைப்போல வேட்டையாடுகிறான். ஆனால் பரிசுத்தவேதம் நமக்குப்போதிப்பது என்ன? திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும், உலகத்தால் கறைபடாதபடிக்குத் தன்னைக் காத்துக்கொள்ளுகிறதுமே பிதாவாகிய தேவனுக்கு முன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது. இதை தவிர்த்துவிட்டு "மாறுபாடானவைகளை யோசிக்கும்படி தன் கண்களை மூடி, தீமையைச் செய்யும்படி தன் உதடுகளைக் கடிக்கிறான்" என்று நீதி.16:30-ல் சாலொமோன் குறிப்பிடுகிறார். துன்மார்க்கனுடைய நினைவுகள் எவ்வளவு மோசமாயிருக்கிறது என்று பார்த்தீர்களா? ஆகையால் தான் துன்மார்க்கனை நீதிமானாக்குகிறவனும், நீதிமானைக் குற்றவாளியாக்குகிறவனுமாகிய இவ்விருவரும் கர்த்தருக்கு அருவருப்பானவர்கள் என வேதம் போதிக்கிறது. மேலும் "கண்சாடை காட்டுகிறவன் நோவு உண்டாக்குகிறான்; அலப்புகிற மூடன் விழுவான்" (நீதி.10:10). கண்களை கர்த்தர் உண்டாக்கியதின் நோக்கம் நலமான காரியங்களை பார்க்கவும், நலமான காரியங்களை செய்யவும், கண்விழித்திருந்து ஜெபிக்கவுமே. இதை விட்டுவிட்டு சிலர் கண்களால் பேசி மற்றவர்களுக்கு நோவு உண்டாக்குகிறார்கள். இப்படிப்பட்டவர்களை கர்த்தர் அருவருக்கிறார். இச்செய்தியை வாசிக்கிற அன்பு நேயரே, நீ கண்விழித்திருந்து கர்த்தரை நோக்கி ஜெபி. உன் வேண்டுதலைக் காத்தர் கேட்டு உனக்கு நலமானதைச் செய்வார்.

**கர்த்தருடைய கண்கள் எவர்களை நோக்கிப் பார்க்கிறது?**

கண்விழித்து ஜெபிக்கிறவர்களை மட்டுமல்ல, "கர்த்தருடைய கண்கள் எவ்விடத்திலுமிருந்து, நல்லோரையும் தீயோரையும் நோக்கிப்பார்க்கிறது" என்கிறார் சாலொமோன் குறிப்பிடுகிறார் (நீதி.15:3). ஆம், கர்த்தருடைய கண்கள் எல்லோரையும் பார்த்துக்கொண்டிருக்கிறது. அநேகர் நினைக்கிறார்கள் கர்த்தர் பாரார், கவனியார் என்று. "காதை உண்டாக்கினவர் கேளாரோ? கண்ணை உருவாக்கினவர் காணாரோ? இவைகளை உண்டாக்கின தேவனுக்கு மறைவான

சிருஷ்டி ஒன்று உண்டா? அன்பானவர்களே, மனிதனுடைய நினைவுகள் வீணாயிருக்கிறது. அவன் புல்லின் பூவைப்போல ஒழிந்துபோகிறான். கர்த்தருக்கு பயந்திரு. அவர் ஒவ்வொரு காரியத்தையும் கவனித்துக்கொண்டிருக்கிறார். நாமெல்லாரும் ஒருநாளிலே அவருக்கு கணக்கு கொடுக்கவேண்டியவர்களாயிருக்கிறோம். ஒவ்வொருநாளும் நாம் கணக்குப் பார்க்காமல் வாழ்ந்துகொண்டிருக்கிறோமா? பணம்பெற்றுக்கொள்ளாமல் சும்மா வேலை பார்ப்போமா? கணக்குப்பார்த்து வேலை பார்க்கிறோம் அல்லவா? அப்படியிருக்க நாம் தேவனிடத்திலிருந்து பெற்றுக்கொண்டதற்கு கணக்கு கொடுக்கவேண்டியவர்களாயிருக்கிறோம். ஆகையால், கர்த்தருடைய கண்கள் எவ்விடத்திலுமிருந்து நம்மை நோக்கிக்கொண்டிருக்கிறது என்ற சிந்தையோடிருப்போம். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## ஆண்டவர் மீது நம்பிக்கையாயிருங்கள்

★ கர்த்தராகிய ஆண்டவரே நீரே என் நோக்கமும் என் சிறுவயதுதொடங்கி என் **நம்பிக்கையுமாயிருக்கிறீர்** - சங்.71:5.

★ ....... இவர்கள் தேவனிடத்தில் நம்பிக்கை கொண்டிருக்கிறதுபோல, நானும் **நம்பிக்கை கொண்டிருக்கிறேன்** - அப்.24:15

★ ..... இரட்சிப்பின் **நம்பிக்கையென்னும்** தலைச்சீராவையும் தரித்துக்கொண்டிருக்கக்கடவோம் - 1தெச.5:8.

★ ....... சிறுமைப்பட்டவர்களுடைய **நம்பிக்கை** ஒருபோதும் கெட்டுப்போவதில்லை - சங்.9:18.

★ ........ என் **நம்பிக்கை** விருதாவாய்ப்போக என்னை வெட்கத்திற்கு உட்படுத்தாதேயும் - சங்.119:116.

★ இரட்சகராகிய ஜீவனுள்ள தேவன்மேல் **நம்பிக்கை** வைத்திருக்கிறோம் - 1தீமோ.4:10

★ எங்கள் பிதாக்கள் உம்மிடத்தில் **நம்பிக்கை** வைத்தார்கள், நம்பின அவர்களை நீர் விடுவித்தீர் - சங்.22:4.

★ என் தேவனே உம்மை **நம்பியிருக்கிறேன்** நான் வெட்கப்பட்டுப் போகாதபடி செய்யும் - சங்.25:2.

★ கர்த்தரை என்றென்றைக்கும் **நம்புங்கள்** - ஏசா.26:4

★ விசுவாசத்தினால் **நம்பிக்கையோடே** காத்திருக்கிறோம் - கலா.5:5.

★ நம்முடைய **நம்பிக்கையை** அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக்கடவோம் - எபி.10:23.

★ கர்த்தரையே தன் **நம்பிக்கையாக** வைக்கிற மனிதன் பாக்கியவான் - சங்.40:4.

***M.Rajamani***

# வாசல்களைத் திறவுங்கள்
## Open Doors

**J.C.Choate**



சபையின் பணி சுவிசேஷத்தை உலகத்திற்குப் பிரசங்கிப்பதே ஆகும். நாம் சபையின் அங்கத்தினர்கள் என்றால், பிறகு அதுவே நம்முடைய பணியாகும். அந்தப் பணியைச் செய்யாமைக்கு அடிக்கடி நாம் மன்னிப்புகளைக் கோருகிறோம். நாம் அதிகவேலையிருக்கிறது.... அல்லது அதிக வேலையோடு தொடர்புடையவர்களாயிருக்கிறோம்..... செய்யவேண்டி அந்த வேலையைச் செய்வதற்கு நமக்குப் பணம் தேவையாயிருக்கிறது...... மேலும் நாம் சொந்த இடத்திற்கே தேவையாயிருக்கும் போது உலகத்தின் மற்றப்பகுதிக்கு ஏன் செல்ல வேண்டும்? ஜனங்கள் ஆர்வமில்லாமலிருக்கிறார்கள் என்றும், இலக்கியம், ரேடியோ மற்றும் டி.விக்கு செலவழிப்பது பணவிரயமாகிறது என்றும் சொல்லப்படுகிறது. இப்படிச்செய்யும் போது சபை வளராமலிருப்பதும் கர்த்தர் நாம் செய்யும்படிக்கு நமக்குக் கொடுத்தபணி செய்யப்படாமலிருப்பதும் ஆச்சரியமல்ல.

சுவிசேஷம் அதிகமான ஆத்துமாக்களைச் சென்றடையும் படிக்கு நாம் என்ன செய்யவேண்டுமென சபையின் மூப்பர்களும் அங்கத்தினர்களும் தீவிரமாக யோசிக்கவேண்டியது அவசியம். ஒவ்வொருநாளும் பெருகிக் கொண்டேயிருக்கிற மக்கள் தொகையில் ஜனங்கள் உண்டு. தேவையும் பெரியதாயிருக்கிறது. இது நம்மை நோக்கி வருகின்றதென்றால் பிறகு நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோமா? மற்றவர்களும் இரட்சிக்கப்பட்டவர்களாயிருப்பதைப் பார்க்க நாம் விரும்புகிறோமா? கர்த்தர் நம்மை செய்யும்படிக்குக் கேட்டுக்கொண்டதை செய்ய நாம் ஆயத்தமுள்ளவர்களாயிருக்கிறோமா?

சந்தர்ப்பத்தின் வாசல்கள் எங்கும் காணப்படுகின்றன. நாம் நம்முடைய கண்களைத் திறந்து அவைகளைக் காணவேண்டியது அவசியம். தருணங்கள் இல்லாதது போல காணப்பட்டால், நாம் தருணங்களை உருவாக்கலாம். அவற்றை எவ்வாறு உருவாக்குவது? ஓரளவு முயற்சிசெய்வதன் மூலம். ஒரு காரியம் வாய்க்கவில்லையென்றால், இன்னொன்றிற்கு முயற்சி செய்யுங்கள். விட்டு விடாதீர்கள். நாம் தொடர்ந்து அதை நடப்பிப்போமென்றால், வாசல் நமக்கு திறக்கும். ஒரு முறை அந்த வாசல் வழியே சென்றால், மற்ற வாசல்கள் திறக்கும். சீக்கிரமாய் நாம் செய்ய வேண்டிய பணிகளை அதிகம் பெற்றவர்களாயிருப்போம். அனைத்து பலனையும் பெறும்படிக்கு உதவியை நாடுகிறவர்களாவோம்.

திட்டங்களை உருவாக்குவதிலும் இலக்குகளை நிர்ணயிப்பதிலும் நான் ஒரு பெரிய விசுவாசியாகயிருக்கிறேன். நீங்கள் செய்யாத போது, எதைச் செய்வதற்கும் நீங்கள் எதிர்பார்க்க மாட்டீர்கள் - மேலும் வழக்கமாக நீங்கள்

எதையும் செய்ய மாட்டீர்கள்! பல வருடங்களாக இந்தியாவில் ஊழியஞ்செய்து கொண்டு வருகின்றோம். இந்திய அரசாங்கம் ஐந்தாண்டு திட்டத்தின் அடிப்படையில் தன்னுடைய திட்டங்களை நிர்ணயிக்கிறதை நான் கவனித்தேன். அவர்கள் அதிமுக்கியமான தேவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அந்த திட்டங்களை செயல்படுத்தும்படிக்கு உதவிக்காக மற்றநாடுகளை நாடி தங்களுடைய இலக்குகளை அடைகின்றனர். ஒரு திட்டம் நிறைவேறி அந்த இலக்குகளை அடைந்த போது, அவர்கள் வளர்ச்சியோடு கூட மற்றொரு ஐந்தாண்டுத் திட்டத்தினை வெளியிடுவார்கள்.

திட்டமிடாததும் இலக்குகள் நிர்ணயிக்கப்படாததுமான ஒரு வியாபாரத்தை எனக்குக் காண்பியுங்கள் நான் உங்களுக்குத் தோல்வியை கொண்டுவருகிற ஒரு வியாபாரத்தை காண்பிக்கிறேன். இந்தியா முழுவதும் சிறிய வியாபாரங்களையும், பழக் கடைகளையும், இன்னும் இது போன்ற பலவற்றை நான் கண்டிருக்கிறேன். சொந்தமாக கடைகளை வைத்து நடத்துகின்ற அவர்கள் தாங்கள் செய்கின்ற தொழிலில் திருப்தியடைகின்றனர். ஒரு நாளைக்கு, வாரம், மாதம், மற்றும் ஆண்டிற்கானத் தேவைகளைப் பூர்த்திசெய்யும்படிக்கு கூடுமான அளவு சம்பாதித்து, அவர்கள் மகிழ்ச்சியாயிருக்கின்றனர். ஆனால் மற்றவர்களோ அவற்றில் திருப்தியடைவதில்லை. அவர்கள் தங்களுடைய வியாபாரம் விருத்தியடைந்து கடைசியில் நகரத்தின் வேறொரு பகுதியில் ஒரு கடையை ஆரம்பித்து, தொடர்ந்து இன்னொரு கடை, இன்னொரு கடை என ஏற்படுத்துகின்றனர். அவர்கள் அந்த நகரில் அதிகமான கடைகளையோ அல்லது வியாபாரங்களையோ நடத்துபவர்களாயிருக்கின்றனர். ஆனால் அவைகள் அவர்களுக்குப் போதுமானதாயில்லை. அவர்கள் தொடர்ந்து மற்ற நகரங்களுக்கும் முடிவாக நாடு முழுவதிலுமுள்ள நகரங்களுக்கும் நகருகின்றனர். அவர்களுடைய தரிசனம் மற்ற நாடுகளுக்கும் விரிவடைந்து செல்லுவதற்கான தருணங்களை ஏற்படுத்துகிறதாயிருக்கிறது. நாம் எல்லோரும் துரித உணவு வியாபாரங்கள், குளிர்பானக் கம்பெனிகள், கார்கள், ஆகாயவிமானங்கள் மேலும் உலகமுழுவதிலும் காணப்படுகின்ற பெயர் பெற்ற தயாரிப்புகள் போன்றவைகள் பற்றி நன்கு அறிந்திருக்கிறோம். இப்பேர்பட்ட உலகளாவிய விற்பனை எதிர்பாராதவிதமாக நிகழவில்லை. இவைகள் அந்தந்த தலைவர்கள் கொண்டிருந்த தரிசனம், உருவாக்கின திட்டங்கள், உலகையடைய நிர்ணயித்த இலக்குகள் போன்றவற்றால் நிகழ்ந்தது. மிகக் கடினமான உழைப்பு, உரிமையாளர் முதற்கொண்டு அவரோடு ஒத்துழைத்த சக உழைப்பாளிகளோடு வெற்றிபெற மேற்கொண்ட உழைப்பு போன்றவைகளே இந்த நிகழ்விற்கு ஆதாரம், ஆனால் அவர்களுடைய முயற்சிகள் முடிவிலே இலக்குகளை அடைவதோடுகூட முடிசூட்டப்பட்டன.

கர்த்தருடைய ஜனங்களாகிய நாம், இவ்வுலகில் மிகச்சிறப்பான உற்பத்திப்பொருளைக் கொண்டிருக்கிறோம்: அது சுவிசேஷம், இயேசு கிறிஸ்துவினுடைய நற்செய்தி, மேலும் அவர் தருகிறதான இரட்சிப்பு. நாம் சத்தியத்தை உடையவர்களாயிருக்கிறோம். இப்போதைக்கு, இந்த உற்பத்திப்

பொருளின் மேல் விசுவாசம் கொண்டுள்ளவர்கள் மேலும் மற்றவர்களை இந்த இரட்சிப்பிற்குள் கொண்டுவரும்படி என்னவெல்லாம் செய்ய வேண்டுமோ அவற்றிற்கு முதலீடு செய்ய தன்னார்வமுள்ள ஊழியர்கள் தான் நம் அனைவருடைய தேவையாயிருக்கிறது. சில லௌகீக உற்பத்திப் பொருளை விற்பனை செய்கின்ற மனிதனைப் பற்றிய காரியம் என்ன? அவன் வாழ்வதற்குத் தேவையானவற்றை உற்பத்திசெய்ய வேண்டியவனாயிருக்கிறான். நம்மைக்குறித்தும், மனிதவர்க்கத்திற்கென்று நாம் கொடுத்துக் கொண்டிருக்கின்ற உற்பத்திப் பொருளைக் குறித்ததுமான பற்றிய காரியம் என்ன? நாம் இரட்சிக்கப்பட்டு பரலோகத்திற்குச் செல்ல விரும்பினால் நாமும் கூட கட்டாயமாக உற்பத்தி செய்யவேண்டும்.

எனது சொந்த அனுபவத்தைப் பொறுத்த மட்டில் என்னுடைய குடும்பமும் நானும் பலவருடங்களுக்கு முன்பாகவே இந்தியா வர விருப்பப்பட்டோம். நாங்கள் விசா பெறும்படிக்கு பல முறை முயற்சித்தோம் ஆனால் பெற முடியவில்லை. நாங்கள் முயற்சியை கைவிட்டிருந்திருக்கலாம் ஆனால் நாங்கள் விடவில்லை. மாறாக நாங்கள் பல வருடங்களாக பாகிஸ்தான் சென்றோம். மீண்டும் இந்தியா வர முயற்சித்தோம் ஆனால் ஸ்ரீலங்கா வழியாக சுற்றுப்பயணம் மேற்கொண்டோம். கடைசியாக நாங்கள் இந்தியாவிற்குள் நுழைந்தோம். தொடர்ச்சியான விசா பிரச்சனையின் காரணமாக இரண்டு வருடங்களுக்கு நாங்கள் இந்தியாவை விட்டு வெளியேற வேண்டியவர்களாயிருந்தோம். அந்த சமயத்தில் ஸ்ரீலங்காவில் வானொலி நிலையம் துவங்கப்பட்டது. இந்தியாவிற்கெனவும், ஆசியாவிற்கெனவும், பலமொழிகளில் வானொலி நிகழ்ச்சியை ஒலிபரப்பும்படியான சந்தர்ப்பத்தை நாங்கள் நழுவ விடவில்லை. மேலும், நாங்கள் இலக்கியத்தை பலமொழிகளில் (வேதாகம அஞ்சல்வழி பாடத்திட்டங்கள், மாத இதழ்கள், துண்டுப்பிரதிகள், மற்றும் புத்தகங்கள்) அச்சிட்டு பிரசுரிக்கும்படிக்கு ஒரு மாபெரும் முயற்சி மேற்கொண்டோம். இலக்கியத்தின் வாயிலாகவும், வானொலி வாயிலாகவும் நேபாளம், சிங்கப்பூர், கிழக்குமலேசியா, இந்தோனேஷியா, பிலிப்பைன்ஸ், மியான்மர், மற்றும் ஆசியா, ஆப்பிரிக்காவிலுள்ள நாடுகளிலும் உலக முழுவதிலும் ஊழியம் செய்யும்படிக்கு இது வழி நடத்தியது. இன்று இந்தியாவிலேயே தொலைக்காட்சி ஒலிபரப்புகிறதான டி.வி. நிகழ்ச்சி மூலம் சுவிசேஷம் பரவுவதற்கான வாசல் திறக்கப்பட்டுள்ளது! மற்றபடி தேவன் வாசல்களைத்திறந்தார், நாங்கள் அதன் வழியாக மற்ற வாசல்களை கண்டடையும்படி சென்றோம். கர்த்தருடைய ஊழியத்தை விரிவாக்கும்படியான வாசல்கள் திறக்க காத்திருப்பீர்கள் என்றால் உங்களுக்கும் எங்களுக்கும் எவ்விதமான வாசல்கள் திறக்கப்பட்டிருக்கும் என்பதை அவர் அறிவார்.

என்னுடைய குடும்பமும் நானும் சுவிசேஷத்தை பிரசங்கிப்பதற்கும் கர்த்தருடைய சபையை ஸ்தாபிப்பதற்கும் பல லட்ச மக்களை கொண்ட பட்டணங்களில் நுழைந்திருக்கிறோம். நாங்கள் அங்கு சென்றபோது ஒரு ஆத்துமாவைக்கூட அறியவில்லை, ஆனால் நாங்கள் அங்கே இருந்தோம், மேலும்

நாங்கள் கர்த்தர் எங்களோடிருந்தார் எனவும் அங்கு ஊழியஞ்செய்ய எங்களுக்கு அருளப்பட்டது என்பதையும் அறிந்துகொண்டோம். முதல் ஞாயிறு நாங்கள் எங்களுடைய ஹோட்டல் அறையிலேயே தேவனை ஆராதிக்கவேண்டியவர் களாயிருந்தோம். பின்பு ஒரு வாடகை வீட்டில் அல்லது எங்கெல்லாம் நாங்கள் சென்றோமோ அங்கெல்லாம் ஆராதனை செய்தோம். வழக்கமான அந்த ஞாயிற்று கிழமையில் எங்களோடு ஆராதனை செய்யும்படி யாரோ ஒருவரை கண்டுபிடித்துக்கொண்டோம். அதை நாங்கள் தொடர்ச்சியாகச் செய்கையில், நாங்கள் அநேகம் அநேகம் பேர்களை எங்களோடு வேத ஆராய்ச்சி செய்யும்படி கண்டுபிடித்தோம்! சீக்கிரமாய் அங்கே மனந்திரும்புதல்கள் நடைபெற்றது. நான் மதசம்பந்தப்பட்ட புத்தக சாலைகளையும், வேதாகம சங்கங்களையும், சமயக் கூட்டங்களையும் கூட (ஒருமித்துப்போக அல்ல, தொடர்பு ஏற்படுத்தி நாங்கள் இருக்குமிடத்தினை ஜனங்கள் அறிந்து கொள்ளும்படிக்கு), சந்தித்தேன். கைப்பிரதிகளையும் அழைப்பு அட்டைகளையும் அச்சிட்டு கடைகளில் இருப்பவர்களுக்கும், சந்தையிலும் அல்லது யாரையெல்லாம் நாங்கள் சந்திக்கிறோமோ அவர்களையும் எங்களுடைய கூட்டங்களிலும் தேவனுடைய வார்த்தையை ஆராய்ச்சி செய்ய கலந்து கொள்ளும்படி அழைத்தோம். நான் நம்முடைய அஞ்சல் வழி பாடத்திட்டத்தினை செய்தித்தாளில் விளம்பரப்படுத்தினேன். மேலும் எங்கெல்லாம் வாய்ப்புண்டோ, அங்கு நான் விரைந்து உபதேசித்து உள்ளூர் செய்திதாட்களிலும் விளம்பரப்படுத்தினேன். இதன் விளைவாக ஜனங்களோடு அறிமுகமானோம், கூட்டங்களுக்கு அவர்களை அழைத்தோம், அவர்களுடைய வீடுகளில் வேதாகம வகுப்புகளை ஏற்படுத்தினோம், அவர்களில் அதிகமானோர் மனந்திரும்பினார்கள், கற்பிக்கவும் போதிக்கவும் சிலருக்கு கற்றுக்கொடுத்து பயிற்சியளித்தோம், இன்றோ வானொலி நிகழ்ச்சியிலும், இந்திய தொலைக்காட்சி நிலையங்களிலும் மேலும் ஆசியாவின் மற்ற நாடுகளிலும் சுவிசேஷத்தை அறிவிக்கிற மூப்பர்களையும் பிரசங்கியார்களையும் நாங்கள் பெற்றிருக்கிறோம். இது நாங்கள் செய்ததை நொடிப்பொழுதில் வெளிப்படுத்துகிறது. யாரெல்லாம் திறந்த வாசல்கள் வழியாகச் செல்ல ஆயத்தமாயிருக்கிறார்களோ அவர்களோடு கூட எங்களால் தொடர்ந்து பணியாற்ற இயலுகிறது. நம்மில் எங்களுடைய பூரண இலக்குகளை அடையாதபோதிலும், செய்யவேண்டிய காரியங்கள் அதிகமிருக்கிறபடியால், நாம் கர்த்தரிடத்தில் அன்புகூர்ந்து, அவருடைய காரியத்தை பரப்பவிரும்புகிறபோது, அதைச் செய்ய அவர் நம்மை ஆசீர்வதிப்பார் என எங்களால் உறுதியாக அறிவுறுத்த முடிந்தது.

கிறிஸ்து, "....நீங்கள் உலகமெங்கும் போய், சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்"(மாற்16:15,16) என்றார். மறுபடியும், அவர், "....இதோ, வயல்நிலங்கள் இப்பொழுதே அறுப்புக்கு விளைந்திருக்கிறதென்று உங்கள் கண்களை ஏறெடுத்துப்பாருங்கள் என்று நான் உங்களுக்குச்

சொல்லுகிறேன்"(யோவா.4:35) என்றார். இன்னொரு சமயம் அவர், "..... அறுப்புமிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்; ஆகையால் அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள்" (லூக்.10:2) என்றார்.

இயேசு, "கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும். ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளுகிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும் (மத்.7:7,8) எனவும் துரிதப்படுத்தினார். இந்தக்காரியங்கள் நிறைவேறும்படிக்கு, ஒரு தனிமனிதன் இதற்கான முயற்சியினை கண்டிப்பாக மேற்கொள்ள வேண்டுமென, இது குறித்ததான வாக்குத்தத்தங்களை தயவுகூர்ந்து கவனியுங்கள். ஆனால், தேனாலே எல்லாம் கூடும் (19:29) என்பதை நினைவுகூருங்கள், மேலும் தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்? (ரோம.8:31). மறுபடியும் கிறிஸ்து நாம் தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடினால், நம்முடைய தேவைகள் எல்லாம் கொடுக்கப்படும் (மத்.6:33) என்றார், மேலும் கர்த்தர் உலகத்தின் முடிவுபரியந்தமும் சகல நாட்களிலும் நம்மோடு இருப்பேன் எனவும் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார். பவுல் தன்னைப் பலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய தனக்குப் பெலனுண்டு என அறிவித்தான் (பிலி.4:13).

என்னுடைய சகோதரரே, இதைப்பற்றி சற்று சிந்தியுங்கள். நாம் உலகைப் பார்க்க தரிசனத்தோடு கூட நம்முடைய கண்களை ஏறெடுக்கும்போது, நாம் இசைந்த உதவிக்காரர்களாக மாறுவோம்: தேவன் நம்மை பெலப்படுத்துகிறவர், கிறிஸ்து நம்மை வழிநடத்துகிறவர், சுவிசேஷம் (இரட்சிப்பிற்கென்று தேவவல்லமை யுடையது) பிரசங்கிக்கப்பட வேண்டியது, மேலும் நாம் கர்த்தருடைய பிள்ளைகளை நமக்கு உதவிசெய்யும்படிக்கும், ஊக்கப்படுத்தும் படிக்கும் பெற்றுள்ளோம். இதுமாத்திரமல்ல, ஆனால் மனந்திருந்திய ஒவ்வொருவனும் இன்னொரு வேலையாளாகவும், சுவிசேஷம் பரம்பி மகிமைப்படுவதற்கு அதிகமான பண உதவியைக் கொண்டுவருகிறவனாகவும் மாறவேண்டும். நாம் இதைச் செய்ய ஆயத்தமாயிருக்கும்போது எந்த நேரத்திலும் உலகத்திற்கு கிறிஸ்துவை எடுத்துச் செல்ல முடியும். நாம் எழுந்து வாசல்களைத் தட்ட ஆரம்பித்து நமக்கென்று திறக்கப்பட்ட வாசல்களுக்குள் உட்பிரவேசிப்பது அவசியம். வாசல்களும் அதற்கு மேலாக வாசல்களும் கர்த்தருக்கென்றும் அவருடைய பணிக்கென்றும் பெரிய காரியங்களைச் செய்ய வழிநடத்தும் என்பதே வாக்குத்தத்தமாயிருக்கிறது. நாம் அனைவரும் ஒன்றாக இணைந்து "இதோ அடியேன், கர்த்தாவே, என்னை அனுப்பும்" எனக் கூறுவோமாக.

# இயேசு கிறிஸ்து நித்திய பலி

## Jesus Christ the Eternal Sacrifice

- *Betty Burton Choate*

பெண்கள் பகுதி

## The Choice of Families

## குடும்பங்களின் மேன்மை

நம்முடைய சரீரப்பிரகாரமான பிறப்பில் நாம் விரும்புகின்ற ஒரு குடும்பத்தில் பிறக்க அந்தக் குடும்பத்தைத் தெரிவு செய்ய இயலாது. நாம் நம்முடைய பிறப்பிற்குப்பின் வெளிப்படையாக நாம் பிறந்த அந்த குடும்பத்தின் அங்கமாக இருந்துகொண்டிருந்தோம்.

ஆவிக்குரிய பிரகாரமாக, நாம் எந்தக்குடும்பத்தின் அதாவது தேவனுடைய அல்லது சாத்தானுடைய குடும்பத்தின் அங்கமாக இருப்போம் என்பதைத் தெரிவு செய்துகொள்கிறோம். வெறுமனே தெரிந்துகொள்வதினால், தேவனுடைய பிள்ளையாக நம்மை மாற்றிக்கொள்ளுகிறதில்லை. அவருடைய குடும்பத்திற்குள் பிறக்க நாம் தண்ணீரின் பிறப்பு மற்றும் ஆவியின் பிறப்பாகிய ஞானஸ்நானம் என்ற பிறப்பிற்கான வழிமுறையின் வழியாகச் செல்லவேண்டும்.

1பேதுரு1:22,23 மற்றும் 2:1:2 இந்த ஆவிக்குரிய பிறப்பைப் பற்றி மேலும் தெளிவுப்படுத்துகிறது. "…..ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக் கொண்டவர்களாயிருக்கிறபடியால், சுத்த இருதயத்தோடே…… அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவவசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே… இப்படியிருக்க…..நீங்கள் வளரும்படி புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள்".

"அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை (கிறிஸ்துவை) ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார். அவர்கள், இரத்தத்தினாலாவது மாம்ச சித்தத்தினாலாவது புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவாமல், தேவனால் பிறந்தவர்கள்" (யோவா.1:12,13).

"நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே. ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்ததைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே…நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்களே….. மேலும் நீங்கள் புத்திரராயிருக்கிறபடியினால், அப்பா, பிதாவே! என்று கூப்பிடத்தக்கதாகத் தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பினார்.

ஆகையால் இனி நீ அடிமையாயிராமல் புத்திரனாயிருக்கிறாய்; நீ புத்திரனேயானால், கிறிஸ்து மூலமாய்த் தேவனுடைய சுதந்தரனாயுமிருக்கிறாய்" (கலா.3:26,27;4:6,7).

**கிறிஸ்துவின் சகோதரத்துவத் தொடர்ச்சி**

வேதவாக்கியங்களில் கிறிஸ்து பரத்திற்கு எழுந்தருளின பிறகு, கிறிஸ்துவோடுகூட நம்முடைய சகோதரத்துவத்தின் மூலம் தேவனுடைய பிள்ளைகளாகும்படியான நம்முடைய உறவினை ஏற்படுத்தி தேவனுக்கும் கிறிஸ்துவுக்குமிடையேயுள்ள முடிவில்லா பிதா-குமாரன் உறவினை பல குறிப்புகள் வெளிப்படுத்துகின்றன:

> இயேசுகிறிஸ்து தேவனுடைய குமாரனாகவும் மனுஷகுமாரனாகவும் மாம்சத்திலே பிறந்தார். அவர் வானத்துக்கு ஏறெடுத்துக்கொள்ளப்பட்ட இரட்சகராக, தேவனுடைய குமாரனாகவும் அவருடைய ஆவிக்குரிய குடும்பத்தில் பிறந்திருக்கிறவர்களுக்கு சகோதரராகவும் நிலைத்திருக்கிறார். அவரோடுள்ள சகோதரத்துவத்தின் மூலமே நாம் தேவனுடைய குமாரர்களாக அழைக்கப்படக் கூடியவர்களாயிருக்கிறோம்.

"நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர்தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சி கொடுக்கிறார். நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே; **தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன்சுதந்தரருமாமே;** கிறிஸ்துவுடனேகூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனேகூடப் பாடுபட்டால் அப்படியாகும்" (ரோம.8:16,17). யோவான்1:1-14-ன்படி ஆதியிலிருந்தே, வார்த்தை தேவனோடிருந்தது அந்த வார்த்தை தேவனாயிருந்தது. இந்தக்கூற்று தேவத்துவத்தில் சமத்துவத்தைக் காட்டுகின்றது. மேலும் அந்த வார்த்தை தம்மை வெறுமையாக்கி (பிலி.2:7), மனுஷ சாயலாகி, தேவனுடைய குமாரனாகத் தேவனுக்குக் கீழ்ப்படிந்தவராய் தம்மைத் தாமே தாழ்த்தி, தேவனுடைய முதற்பேரானவராகி தேவனுடைய சுதந்தரரானார். இதைப்போல தேவனுடைய ஆவிக்குரிய குடும்பத்திற்குள் பிறப்பதன் மூலம் நாம் கிறிஸ்துவினுடைய சகோதரரும், சகோதரிகளுமாக மாறும்போது, நாம் தேவனுடைய ஜனங்களும் கிறிஸ்துவுடனேகூட சுதந்தரருமாக இணைக்கப்படுகிறோம்.

"எப்படியெனில், பரிசுத்தஞ்செய்கிறவரும், பரிசுத்தஞ்செய்யப்படுகிறவர்களுமாகிய யாவரும் ஒருவராலே உண்டாயிருக்கிறார்கள்; இதனிமித்தம் அவர்களைச் சகோதரரென்று சொல்ல அவர் வெட்கப்படாமல்; .....ஆதலால், பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்; மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே

அழிக்கும்படிக்கும், ஜீவகாலமெல்லாம் மரணபயத்தினாலே அடிமைத் தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலைபண்ணும்படிக்கும் அப்படியானார்.....அன்றியும், **அவர்** ஜனத்தின் பாவங்களை நிவர்த்தி செய்வதற்கேதுவாக, தேவகாரியங்களைக்குறித்து இரக்கமும் உண்மையுமுள்ள பிரதான ஆசாரியராயிருக்கும்படிக்கும் எவ்விதத்திலும் **தம்முடைய சகோதரருக்கு ஒப்பாக வேண்டியிருந்தது**" (எபி.2:11,14,15,17).

"......**கிறிஸ்துவோ** அவருடைய **வீட்டிற்கு** மேற்பட்டவரான **குமாரனாக** உண்மையுள்ளவராயிருக்கிறார்; ...நாமே அவருடைய வீடாயிருப்போம் ......கிறிஸ்துவினிடத்தில் பங்குள்ளவர்களாயிருப்போம்"(எபி.3:6-14).

கிறிஸ்து தம்மைத்தாமே வெறுமையாக்கி, மனுஷசாயலானது போல, அவருடைய சகோதரரும் கிறிஸ்துவினுடைய சகல பரிபூரணத்தினால் நிறையப்படும்போது அவர்களும் திவ்விய சுபாவத்திற்கு பங்குள்ளவர்களாக மாறுவார்கள்!

"தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினதுமன்றி, இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, **திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும்பொருட்டு**, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது" (2பேதுரு1:3,4).

"**நீங்கள்** அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாகவும், **தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவும்**..." (எபே.3:19).

தேவன் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களை ".....தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன் குறித்திருக்கிறார்" (ரோம.8:29).

"உங்கள் சரீரங்கள் கிறிஸ்துவின் அவயவங்களென்று அறியீர்களா?..... கர்த்தரோடிசைந்திருக்கிறவனும், அவருடனே ஒரே ஆவியாயிருக்கிறான்" (1கொரி.6:15,17).

எனவே, கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மனிதவர்க்கத்திற்காக தொடர்ந்து மத்தியஸ்தராய் கிரியை நடப்பிக்கும்படிக்கு பரலோகத்திற்குத் திரும்பிச் சென்றிருக்கிறார். 1தீமோத்தேயு2:5-ன்படி, **கிறிஸ்து இயேசு மனுஷனாக** தேவனுடைய வலதுபாரிசத்தில் அமர்ந்திருக்கிறார். அவர் தேவனுடைய குமாரனாகவும், மனுஷகுமாரனாகவும்: உயிர்த்தெழுந்தது, மறுரூபமாக்கப்பட்ட நமது இரட்சகராகவும் இருக்கிறார். நாமனைவரும் ஆவிக்குரியபிரகாரமாக அவருக்குள் "திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்காளக மாறியிருக்கிறோம்".

## சபை அமைப்பு
## CHURCH ORGANIZATION

- சுயாதீன சபைகள் - அப்.14:23
- கிறிஸ்து இயேசுவுக்கே அடிமை - 1பேது.5:1-4
- மூப்பர்களால் வழிநடத்தப்படுதல் - தீத்து1:5-9; எபி.13:17
- உதவிக்காரரால் வழிநடத்தப்படுதல் - 1தீமோ.3:8-13
- போதகர்களால் போதிக்கப்படுதல் - எபி.5:12-14
- பிரசங்கியார்களால் போதிக்கப்படுதல் - ரோமர்10:13-15
- அங்கத்தினர்களால் வழிநடத்தப்படுதல் - ரோமர்12:4-8

## கிறிஸ்தவத் தொழுகை
## Christian Worship

- ஆவியோடும் உண்மையோடும் - யோவா.4:24
- வாரத்தின் முதல்தோறும் - அப்.20:7
- கர்த்தருடைய பந்தி - 1கொரி.11:20-29
- பாடல் -எபேசி.5:19; கொலோ.3:16
- கொடுத்தல் - 1கொரி.16:1,2
- ஜெபித்தல் - அப்.2:42; 1கொரி.14:15
- போதித்தல் - அப்.20:7

## ஜெபியுங்கள்



- இம் மாதம் கொடைக்கானலில் நடைபெறவுள்ள ரிட்ரீட்டுக்காக...
- ஆகஸ்ட்29-ம் தேதி ஞாயிற்றுகிழமை வத்தலக்குண்டு சபையில் கலந்துகொண்டு தேவசெய்தி கொடுத்த சகோ.ராஜநாயகம், (காங்கேயம்) மற்றும் சகோ.பிலேமோன்ராஜா, (மதுரை) அவர்களுக்காகவும் மாவட்ட ஊழியர்கள் சகோ.ராஜாமணி, (திருநெல்வேலி) சகோ.ராம்ராஜ், (திருப்பூர்) சகோ.மாயாண்டி, (ஈரோடு) சகோ.பூபதி, (கரூர்) அவர்களுக்காகவும் ...
- சகோதரி குளோரிக்கு தேவன் கொடுத்த சுகத்திற்காக நன்றி சொல்லி...
- ராமேஸ்வரத்தில் நடைபெறவுள்ள **'World Evangelism Team' workers** கூட்டங்களுக்காக...

## பொது அறிவுச் சோதனை

1. அதிகமான பரப்பளவு கொண்ட நாடு எது?

அ) சீனா ஆ) ரஷ்யா இ) இந்தியா

2. கொரில்லாபோர் முறையை ஏற்படுத்தியவர்கள் யார்?

அ) முஸ்லீம் ஆட்சியாளர்கள் ஆ) மராட்டிய ஆட்சியாளர்கள் இ) விஜயநகர ஆட்சியாளர்கள்

3. இஞ்சி எதனை குணப்படுத்த பயன்படுகிறது?

அ) செரித்தல் ஆ) தலைவலி இ) மஞ்சட்காமாலை

4. நாகலாந்தின் ஆட்சி மொழி எது?

அ) காசி ஆ) நாகா இ) அசாமிய மொழி

5. கடற்படைதினம் எந்த நாளில் அநுசரிக்கப்படுகிறது?

அ) நவம்பர்28 ஆ) நவம்பர்4 இ) நவம்பர்6

விடைகள்:
1. ரஷ்யா
2. மராட்டிய ஆட்சியாளர்கள்
3. செரித்தல்
4. அசாமிய மொழி
5. நவம்பர்4

"நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" (மாற்கு 16:15)

**உங்களுடைய திருச்சபையில் கூட்டங்கள் நடத்தவும் மற்றும் வேதபாட வகுப்புகள் நடத்தவும் எங்களோடு தொடர்பு கொள்ளவும்.**

நாங்கள் உங்களுக்கு உதவி செய்ய காத்திருக்கிறோம்.



**தொடர்புக்கு:** சகோ.ஜான் எஸ்.நாதன். கிறிஸ்துவின் சபை ஊழியர்
மீஞ்சூர் (94444 43378)

சகோ.அர்ஜுனன். கிறிஸ்துவின் சபை ஊழியர்
வத்தலக்குண்டு (94435 58041)

**ஒரே வழி**

**'The One Way'** வேதபாடம்

The Master Course -ஐ அஞ்சல் வழி மூலம் படிக்க விரும்புகிறவர்கள்

இன்றே தபால் செலவுக்காக ரூபாய் 15-ஐ அனுப்பி.

ஒரு வருடத்தில் பயின்று Certificate பெற்றுக்கொள்ளுங்கள்.

அத்துடன் 'வேதாகம சபை' என்ற புத்தகத்தையும் பரிசாகப் பெற்றுக்கொள்வீர்கள். வயது: 20 க்கு மேல்.

**Batlagundu Bible College**
**Post Box 5, Batlagundu-624 202**
**S.INDIA**

# உண்மையான சபை தோன்றிய வரலாறும்
## பிரிவினை சபைகள் தோன்றிய வரலாறும்

### உண்மையான திருச்சபை

**"இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன், பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை" மத்தேயு 16:18**

| சபை | வருடம் | தோற்றுவித்தவர் | இடம் |
|---|---|---|---|
| கிறிஸ்துவின் சபை | கி.பி.33 | கிறிஸ்து | எருசலேம் |
| ரோமர்16:16 | | மத்தேயு16:18 | அப்.2:14 |
| எபேசியர்5:32 | | அப்.20:28 | ஏசாயா2:2-4 |
| கொலோ1:18 | | எபேசியர்1:22 | லூக்கா24:47-49 |

### பிரிவினைக்கூட்டம்

| | | | |
|---|---|---|---|
| 1. கத்தோலிக்க சபை | கி.பி.607 | மூன்றாம் போனிபஸ் | ரோம் |
| 2. லூத்தரன் சபை | கி.பி.1517 | மார்டின் லூத்தர் | ஜெர்மனி |
| 3. இங்கிலாந்து சபை | கி.பி.1534 | எட்டான் ஹென்றி | இங்கிலாந்து |
| 4. கால்வினிஸ்ட் சபை | கி.பி.1555 | ஜான் கால்வின் | ஸ்விட்சர்லாந்து |
| 5. பிரிஸ்பிட்டேரியன் சபை | கி.பி.1560 | ஜான் நாக்ஸ் | ஸ்காட்லந்து |
| 6. காங்கிரிகேஷனலிஸ்ட் சபை | கி.பி.1592 | இராபர்ட் பிரவுன் | ஹாலந்து |
| 7. பாப்டிஸ்ட் சபை | கி.பி.1607 | ஜான் ஸ்மித் | ஆம்ஸ்டர்டாம் |
| 8. அமெரிக்கன் பாப்டிஸ்ட் சபை | கி.பி.1629 | ரோஜர் வில்லியம்ஸ் | அமெரிக்கா |
| 9. நண்பர்கள் ஐக்கிய சபை | கி.பி.1665 | டெர்பி ஜார்ஜ்பாக்ஸ் | இங்கிலாந்து |
| 10. மெத்தடிஸ்ட் சபை | கி.பி.1739 | ஜான் வெஸ்லி பால் | இங்கிலாந்து |
| 11. கடைசிகால புனிதர்கள் சபை | கி.பி.1830 | ஜோசப் ஜான் ஸ்மித் | நியூயார்க் |
| 12. ஏழாம் நாள் சபை | கி.பி.1843 | வில்லியம் மில்லர் | நியூயார்க் |
| 13. கிறிஸ்தவ விஞ்ஞான சபை | கி.பி.1881 | மேரி பெக்கர் எட்டி | போஸ்டன் |
| 14. யேகோவா சாட்சிகள் | கி.பி.1884 | சார்லஸ் டி.ரஸல் | பென்சில்வானியா |
| 15. தேவனுடைய சபை | கி.பி.1886 | ரிச்சர்ட் ஸ்பர்லிங் | டென்னிஸி |
| 16. நசரேயர் சபை | கி.பி.1895 | பி. எப். பிரீஸ் | கலிபோர்னியா |
| 17. பெந்தெகொஸ்தே சபை | கி.பி.1901 | சில குழுவினர் | இலங்கை |
| 18. அசெம்பிளி ஆப் காட் சபை | கி.பி.1914 | சில குழுவினர் | ஹாட்ஸ் பிரிஸ் |
| 19. இன்னும் அநேகம்.............................. | | | |

**"மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்று, ஏசாயா தீர்க்கதரிசி நன்றாய்ச் சொல்லியிருக்கிறான்" என்றார் இயேசு (மத்தேயு 15:9)**

## நடப்புச்செய்திகள்

- தமிழகத்தில் 40 ஆயிரம் கோடியில் 900 கி.மீ தூரத்திற்கு நீர்வழிச்சாலை அமைப்பதன் மூலம் குடிநீர், மின்சாரம், பாசனநீர் பிரச்சனைகளை முழுமையாக போக்கலாம் என தேசிய நதிநீர் வழிச்சாலை இயக்க தலைவர் காமராஜ் தெரிவித்துள்ளார்.
- ஐரோப்பாவிலுள்ள ஸ்காலோவோனியா நாட்டை சேர்ந்த காஸ்பர் ஓரி ஹெக் (51) 'உலகம் எனது நாடு' என்ற தொண்டு நிறுவன தலைவராக இருந்து கொண்டு, உலக அமைதியை வலியுறுத்தி 26 ஆண்டுகளாக நடந்தே உலகை வலம்வருகிறார்
- அண்டைநாடுகள் எதிரிகளாக இருப்பதால் இந்தியாவின் பாதுகாப்பு நிலவரம் அபாயகரமாக இருப்பதாக மாநிலங்களவையில் பாதுகாப்பு துறை அமைச்சர் ஏ.கே.அந்தோணி கவலை தெரிவித்துள்ளார்.

## வேதஅறிவுப்போட்டி எண் 120-ல் வெற்றி பெற்றவர்கள்

M.ராமச்சந்திரன் -ஒட்டநத்தம்
J.ஐசக் -திருநெல்வேலி
M.ரவிஜேக்கப்
Bro. ஷர்லோ -புதுவை
Mrs.மெல்சிடா -திண்டுக்கல்
R.கஸ்தூரி -ஒட்டநத்தம்
M.S.தேவகிருபைரூத் சாலமோன் -மங்களம்கொம்பு
Bro.ஜான்செல்லையா-மதுரை
T.ராஜாத்தி -கோம்பை
A.ரெபேக்காள் -நாகமலை
Mrs.மரகதம்திரவியம் -கோம்பை
P.கிறிஸ்டோபர் -மறவன்குளம்
K.மோகன் -குமாரபாளையம்
J.நிர்மலாஜான் -மதுரை
G.A.ஜான்சன் -எம்.என்.பட்டி
N.கமலவேணி -சென்னை

## வேதஅறிவுப்போட்டி எண் 120-ன் விடைகள்

1. எரேமியா -எரே.30:6
2. தேவ வசனத்தை -மாற்.7:13
3. ஐயோ! - ஏசா.5:21
4. விரியன் பாம்பு - அப்.28:3
5. இஸ்ரவேல் - எசே.33:11
6. அழைத்துமிருக்கிறார் - ரோ.8:30
7. அதிகபெலவானாக்கும் - பிர.7:19
8. எச்சரிக்கையாயிருக்கக்கடவன் - 1கொ.10:12
9. காரிருளைப்போலிருக்கும் - நீதி.4:19
10. கர்த்தரால் - 2கொரி.10:18

சரித்திர ஆய்வு

# “நீங்கள் தேவர்கள்”

“... உன்னதமானவரின் மக்கள்...” சங்.82:6

## “Ye are gods”

**“Children of the most High” Ps.82:6**

**John S.Nathan,**
**Gospel Minister**
**Mobile: 94444 43378**

### தேவனுடைய புத்திரர் ரோமர்8:14 (Sons of God)

தேவன் நம்மை அவரைப்போலவே வாழ படைத்ததினால் மட்டுமின்றி, நம்மை இரட்சித்திட நமக்காக அவர் சாபமானதினால், அவருடைய பரிசுத்த, விலையேறப்பெற்ற இரத்தத்தினால் நம்மை பாவமற கழுவி, நம்மிடமிருந்த எல்லா பாவங்களை நீக்கி 1யோவான்1:7 சுத்திகரித்ததினால் மட்டுமின்றி **விசுவாசத்தினால்** நாம் அனைவரும் ஆபிரகாமின் சந்ததியாராயும் இருக்கிறோம் கலா.3:29. நம்மிடம் இருந்த எல்லாவேற்றுமைகளும் நம்மை விட்டகன்றது (வசனம்28). ஆம், நாம் இப்போது விசுவாசத்தின் வாயிலாக **தேவனுடைய புத்திரர்!** வசனம்26 (Sons of God) இனியாரும் நம்மை பாவிகள் என்று அழைக்கமுடியாதே! ஏனெனில் அவர்களுடைய பாவங்களையும், அவர்களுடைய அக்கிரமங்களையும் நான் **இனி** நினைப்பதில்லை எபி.10:17. அத்துடன்... “நாம் அவருடைய சந்ததியார்” அப்.17:29; (His offspring) அவர் பரிசுத்தஞ் செய்கிறவரும் பரிசுத்தஞ்செய்யப் படுகிறவர்களுமாகிய யாவரும் ஒருவராலே உண்டாயிருக்கிறார்கள்; இதினிமித்தம் அவர்களை (நம்மனைவரையும்)ச் **சகோதரரென்று** சொல்ல அவர் வெட்கப்படவில்லை” எபி.2:11. ஏனெனில் அவர் பாவமற்றவராக பரிசுத்த ஆசாரியராயிருக்கும்படிக்கு எவ்விதத்திலும் தம்முடைய சகோதரருக்கு ஒப்பாயிருந்து.... சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவி செய்ய வல்லவராயிருக்கிறார்” வசனம்18. விசுவாசிக்கிற அனைத்து மக்களும் ஆபிரகாமின் சந்ததியாக (விசுவாசத்தினால்) இருக்கையில் உதவியாகக் கைகொடுக்கிறார் வசனம்16.

ரோமர்8:16 (விசுவாசிகளாய் வாழுகிற) “நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று **ஆவியானவர்** தாமே நம்முடைய ஆவியுடனேகூட சாட்சிகொடுக்கிறார்” நம்முடைய விசுவாச வாழ்விற்கு உதவுபவர், நமக்காக ஜெபிக்கிறவர், நம்மை நன்கு அறிந்திருக்கிறவரின் சாட்சி நமக்கு உதவுகிறதே! வசனம் 17 நாம் சுதந்தரர் Heirs Of God, தேவனுடைய உடன் சுதந்தரர் ‘Joint Heirs’ நாம் இவ்வுகில் வாழ்ந்தாலும்... **கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே** இவ்வரிய வாக்குத்தத்தத்தை என்றாவது சிந்தித்து இருக்கிறோமா? நாம் தனிமையாக அல்ல **நீ கிறிஸ்துவுடன்** ‘With Christ’ இருக்கிறாய் என்பதை என்றும் மறவாதே... நான் உன்னைவிட்டு விலகுவதில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை எபி.13:5. இவ்வாறாக வாக்குத்தத்தம் செய்தவர்... **நேற்றும் இன்றும் என்றும்** மாறாதவராயிருக்கிறார் வசனம்8. இனியும் நாம் நம்மை, பரதேசி, அனாதை, யாருமில்லாதவன், ஒன்றுமில்லாதவன் என்று கூறி புலம்பாதே! இவ்வுலகிலே நீங்கள் மகிமையடையவேண்டுமென விரும்பினால் ...அவருக்காக

அவருடனேகூட பாடுபட்டால், கிறிஸ்துவுடனே கூட நீரும் மகிமையடைவீர்கள்! இயேசு கிறிஸ்துவை, எருசலேமிற்கு சென்று அங்கு அவர் பல பாடுகள் படவேண்டாமென கடிந்துகொள்ள விரும்பி அவருக்கு ஆலோசனை கூறிய பேதுரு மத்.16:21,22; பின்நாளில் 1பேது.4:13-16 ...கிறிஸ்துவின் பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதினால் சந்தோஷப்படுங்கள் என்றும் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து அதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக் கடவன் என்று நமக்கு ஆலோசனை கூறுவதை வாசித்தறிந்து, அதன்படியே நடக்க நாம் தீர்மானிப்போம். யோவான்1:12 (இயேசுவின்) நாமத்தின்மேல் **விசுவாசமுள்ளவர்களாய்** அவரை ஏற்றுக்கொண்டவர்கள் **எத்தனைபேர்களோ அத்தனைபேர்களும் தேவனுடைய** பிளைகளாயிருக்கும்படி, அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார்: இதனை வாசிக்கும் எங்களின் அன்பு சகோதரனே, சகோதரியே இன்று இப்பொழுதே நீர் விசுவாசித்தால், அவருக்குக் கீழ்ப்படிய தீர்மானித்தால் நிச்சயமாகவே நீரும் **தேவனுடைய** பிள்ளைதான்! இதில் எவ்விதமான சந்தேகமும் இல்லை. உம்மை வருந்தி அழைக்கும் இயேசுவிடம் விரும்பி சென்றிடுவாயாகில் உலகில் எல்லா எல்லாவற்றையும் விட நீர் அவருக்கு மேலானவனாக கருதப்படுவதுடன் அவர் உனக்கு மேலான மகிமையான வாழ்வினை வழங்கிட அவர் ஆயத்தமாயிருக்கிறார். நீர் ஆயத்தமாயிருக்கிறீரா?

"கர்த்தரை நம்பியே ஜீவிப்போம் கவலை
கஷ்டங்கள் தீர்ந்திடும்" என்று மகிழ்வுடன் பாடுவோம்


## கிறிஸ்தவ தலைமைத்துவ பயிற்சிப் பாடங்கள்

- ★ சகோ. ஜே. சி. சோட் அவர்கள் எழுதியது.
- ★ சகோ. ஜி. டானியேல் அவர்களால் மொழியாக்கம் செய்யப்பட்டது.
- ★ உங்கள் பிரதிக்கு முந்துங்கள்.
- ★ இது ஊழியர்களுக்கான கையேடு.
- ★ ஒரு சபைக்கு ஒரு பிரதி மட்டுமே.
- ★ உங்களுடைய சபை மற்றும் தெளிவான முகவரியை எழுதுங்கள்.
- ★ தபால் செலவுக்காக ரூபாய் 50 அனுப்புங்கள்.

**குறிப்பு**

இப்பிரதியைப் பெற்று உங்களுடைய இடத்திலே மெய்யான புதிய ஏற்பாட்டு திருச்சபையாகிய **கிறிஸ்துவின் சபையை** உருவாக்கலாம்.


**தொடர்புக்கு**

**தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்**, த. பெ. எண் 5, வத்தலக்குண்டு – 624 202
தமிழ்நாடு – இந்தியா.

சிறுவர் பகுதி

# விசுவாசமாகிய கப்பலைச் சேதப்படுத்தியவர்கள்

**வேத பகுதி: 1தீமோத்தேயு1:19,20**



சிறுவர்களாகிய உங்கள் யாவருக்கும் நம்முடைய ஆண்டவரும் கர்த்தருமாகிய இயேசுகிறிஸ்துவின் பரிசுத்தமான நாமத்தில் வாழ்த்துக்கள்.

முதல் நூற்றாண்டிலே விசுவாசமாகிய கப்பலை இமெனேயு. அலெக்சந்தர் போன்றோர் சேதப்படுத்திய தாக பவுல் விசுவாசத்தில் உத்தம ஊழியக்காரனாகிய தீமோத்தேயுவுக்கு எழுதுகிறார். அப்படி எந்த விசுவாசமான கப்பலைச் சேதப்படுத்தினார்கள் என்ற கேள்வி உங்களுக்கு எழும்பும். சபையை விசுவாசமான கப்பல் என்று பவுல் குறிப்பிடுகிறார். விசுவாசிக்கிறவர்கள் இந்த கப்பலாகிய கிறிஸ்துவின் சபையில் இருப்பார்கள். நோவா ஒரு பேழையை உண்டுபண்ணினார் அதுவும் விசுவாசபேழைதான் ஏனென்றால் மழை இல்லாத காலத்தில் பேழையை கட்டினார். உலகம் ஜலத்தினால் அழியப்போகிறது என்று சொல்லியும் ஜனங்கள் நம்பவில்லை. தேவன் மழையை 40 நாள் வருஷிக்கப்பண்ணியபோது ஐயோ! ஐயோ! என்று சொல்லி கூக்குரலிட்டிருக்கக்கூடும். நோவாவும் அவனுடைய குடும்பத்தாரும் காக்கப்பட்டார்கள்.

இன்றைக்கு இந்த விசுவாசமான பேழையை அதாவது கப்பலை இமெனேயு. அலெக்சந்தர் போன்றோர் சேதப்படுத்துகிறார்கள். எப்படியென்றால் சபையில் பிரிவினையை ஏற்படுத்துவது. கப்பலை சேதப்படுத்துவதற்குச் சமம். அப்படி சேதப்படுத்தினால் என்னவாகும்? கப்பல் தண்ணீரில் மூழ்கிவிடும் இல்லையா! அதைப்போல சபையை பாழடிக்க எண்ணம் கொள்கின்றார்கள். இப்படிப்பட்டவர்களை சாத்தானிடத்தில் ஒப்புக்கொடுங்கள் என்கிறார். பவுல். அப்படிப்பட்டவர்களை சாத்தானிடத்தில் ஒப்புக்கொடுத்தார். பிசாசு கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான். ஆகையால் நாமும் அப்படிப்பட்டவர்களை சாத்தானிடத்தில் ஒப்புக்கொடுப்போம். சில சமயங்களில் நாம சொன்னபடி கேட்காவிட்டால் அப்பா அம்மா இப்படி சொல்லுவாங்க. அந்த கரடிகிட்ட இவனை புடிச்சுகொடுத்திடுவோம் என்று இல்லையா? ஆமாம் நாம விசுவாசத்தின் கப்பலை சேதப்படுத்தாது. அது விசுவாசத்தில் முன்னோக்கி செல்வதற்கு நாம உதவியாயிருக்கணும். இருப்பீங்களா!

**மனப்பாட வசனம்:**

"தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள். விழித்திருங்கள்: ஏனெனில். உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான்" -1பேதுரு5:8

# வேத அறிவுப் போட்டி எண்: 121

போட்டியாளாகள் கவனத்திற்கு

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் இம்மாதம் 25 ஆம் தேதிக்குள் "தி வேர்ட் ஆப் கிறைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பிவையுங்கள். பதிவு எண்ணுடன் உங்கள் முழு முகவரியை தெளிவாக எழுதவும்.

1. சந்திரனைக் எதற்காகப் படைத்தார் சூரியன் எதை அறியும்?
2. பரலோகத்திலும் பூலோகத்திலுமுள்ள முழுக்குடும்பத்துக்கும் நாமகாரணராகியவர் யார்?
3. மனுஷன் தேவனோடே வழக்காடும்படி அவர் அவன்மேல் மிஞ்சினதொன்றையும் என்ன செய்யமாட்டார்?
4. நாம் எதுவரையில் தேறியிருக்கிறோமோ, அதுமுதல் ஒரே ஒழுங்காய் நடந்து கொண்டு, ஒரே சிந்தையாயிருப்போமாக என்று எழுதும் அப்போஸ்தலன் யார்?
5. என் ஜனத்தின்மேல் வரும் பொல்லாப்பை நான் எப்படிப் பார்க்கக்கூடும் என்ற ராஜாத்தி யார்?
6. சுயஇஷ்டமான ஆராதனையையும், மாயமான தாழ்மையையும், சரீர ஒடுக்கத்தையும் பற்றி ஞானமென்கிற பேர்கொண்டிருந்தாலும், இவைகள் எதைப் பேணுகிறதற்கே ஒழிய மற்றொன்றிற்கும் பிரயோஜனப்படாது?
7. என் தேவனே, நான் என் தேவனுடைய ஆலயத்துக்காகவும் அதின் முறைமைகளுக்காகவும் செய்த நற்கிரியைகளைக் குலைத்துப்போடாமல், இந்தக் காரியத்தில் என்னை நினைத்தருளும் என்று விண்ணப்பம்பண்ணினவன் யார்?
8. தேவனைப்பற்றின உங்கள் விசுவாசம் எங்கும் பிரசித்தமாயிற்று என்று பவுல் எந்த சபைக்கு எழுதுகிறார்?
9. அர்தசஷ்டா ராஜா பரலோகத்தின் தேவனுடைய நியாயப்பிரமாணத்தைப் போதிக்கிற எவனுக்கு பூரண சமாதானமுண்டாக வாழ்த்தி எழுதினான்?
10. ஒருவன் வேலை செய்ய மனதில்லாதிருந்தால் அவன் எனனசெய்யவுங்கூடாது?

## கிறிஸ்துவின் சபையார் வழங்கும் தமிழ் நிகழ்ச்சிகள்

**சத்தியவழி வானொலி நிகழ்ச்சிகள்** *செய்தியாளர்* -சகோ.பி.ஆர்.சாமி

இலங்கை ஆசிய சேவை 25 மற்றும் 41 மீட்டரில் ஞாயிறு முதல் வெள்ளி வரை தினமும் மாலை 5.30 மணி

*தொடர்பு முகவரி:* சத்திய வழி, தபால் பெட்டி எண்-8405, பெங்களுரு-84

போன்-080-25463507-09844070763 *E-mail:* prsdoug@hotmail.com

**திருமறை தியானம் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்** *செய்தியாளர்* -சகோ.ராஜநாயகம்

**தமிழன் TV யில் சனி காலை 7.15 மணி**

**தமிழன் TV யில் திங்கள் காலை 7.00 மணி**

**இமயம் TV யில் வியாழன் காலை 6.00 மணி**

*தொடர்பு முகவரி:* **திருமறை தியானம், தபால் பெட்டி எண்-27, காங்கேயம்-638 701**

போன்-04257 230030, 989427 30382 *E-mail:* rajarichal@yahoo.co.in

**கிருபையுள்ள வார்த்தை தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்** *செய்தியாளர்* -சகோ.பிலேமோன் ராஜா

Z தமிழ் TV யில் வெள்ளி காலை 5.30 மணி


தமிழன் TV யில் ஞாயிறு காலை 7.45 மணி

*தொடர்பு முகவரி:* கிருபையுள்ள வார்த்தை, தபால் பெட்டி எண்-15, அரசரடி மதுரை-625 010.


போன்-0452-2607028, 92442 14421 *E-mail:* pcpr@graciousword.org, Web:www.graciousword.org

Owned and published by B. Arjunan from 17.2.102 D/5, Rajan nagar, Batlagundu - 624 202 and printed by R. Sathiyamoorthy at Bharathi Press, 14/13/24 Melamanthai Street, Batlagundu - 624 202.
Editor : B. Arjunan.

R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2009-2011
Posted at Batlagundu Post Office on 10th Sep. 2010



BAPTISM-RAVICHANDRAN



DHARAPURAM-PREACHERS' MEET

**உங்கள் வானொலியில்**

இலங்கை ஆசிய சேவை
SW 25 முதல் 41 மீட்டரில்
ஒவ்வொரு சனிக்கிழமை மாலை
5.30 முதல் 5.45 மணி வரை
கேட்டு பயன் பெறுங்கள்

**உங்கள் தொலைக்காட்சியில்**

**TAMILAN TV**
EVERY Monday 6.00 - 6.15 a.m
**IMAYAM TV**
EVERY Wednesday 6.30 - 6.45 a.m

**BATLAGUNDU CHURCH OF CHRIST**
*MEETS HERE*
**17-2-102 D/5, RAJAN NAGAR, BATLAGUNDU-624 202,**
**DINDIGUL DISTRICT, S.INDIA.**
Phone : 04543 263278, Mobile: 94435 58041
E-mail: thewordofchrist@bsnl.in

*Postal Address:*
THE WORD OF CHRIST
POST BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA